வாலிபால்

# பல்கலை அளவில் போட்டி என்.ஜி.எம்., அணி வெற்றி

**கோவை, ஆக. 10–**

பாரதியார் பல்கலை உட்பட்ட கல்லூரி மாணவியருக்கான வாலிபால் போட்டியில் என்.ஜி.எம்., – நேரு கல்லூரி அணிகள் வெற்றி பெற்றன

கோவை, பாரதியார் பல்கலை மற்றும் ராமலிங்க சவுடாம்பிக்கை கல்லூரி சார்பில், 2017–18ம் ஆண்டிற்கான மாணவியர் வாலிபால் போட்டிகள், எஸ்.ஆர்.எஸ்., கல்லூரி கோர்ட்டில் நேற்று துவங்கி; இன்று நிறைவடைகிறது.

இதில், 28 கல்லூரி அணிகள் பங்கேற்று விளையாடி வருகிறது. போட்டிகள் அனைத்தும் லீக் மற்றும் நாக்அவுட் முறையில் நடக்கிறது. நேற்று நடந்த போட்டியின் முடிவு:

முதல் போட்டியில் என்.ஜி.எம்., அணி, 25–1, 25–3 என்ற புள்ளி கணக்கில் எஸ்.என்.எம்., கல்லூரி அணியையும்; 2வது போட்டியில், எஸ்.எம்.எஸ்., அணி, 25–4, 25–9 என்ற புள்ளி கணக்கில் மகாராஜா கல்லூரி அணியையும் வென்றது.

3வது போட்டியில், நேரு கல்லூரி அணி, 23–25, 25–18, 25–22 என்ற புள்ளி கணக்கில் சி.எம்.எஸ்., கல்லூரி அணியை வென்றது.

# விளையாட்டு




▪ பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரியில் நடந்த, பள்ளி மாணவியருக்கு மாநில அளவிலான வாலிபால் போட்டியில், ஈரோடு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அணியும், சேலம் எஸ்.டி., மேரிஸ் பள்ளி அணியும் மோதின.

# வாலிபால் பயிற்சி முகாம் 40 மாணவியர் பங்கேற்பு

**பொள்ளாச்சி ● ஏப். 29–**
பொள்ளாச்சி 'என்.ஜி.எம்., ஸ்போர்ட்ஸ் அகாடமி' சார்பில், வாலிபால் பயிற்சி முகாம் என்.ஜி.எம்., கல்லுாரியில் நடைபெற்று வருகிறது. இதில், மாணவியர் ஆர்வமுடன் பயிற்சி பெற்று வருகின்றனர்.

பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லுாரியில், 'என்.ஜி.எம்., ஸ்போர்ட்ஸ் அகாடமி' சார்பில், மாணவியருக்கான வாலிபால் பயிற்சி முகாம் நடைபெற்று வருகிறது. பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதிகள், கேரளா உள்ளிட்ட பகுதிகளிலிருந்தும் 40 மாணவியர் இந்த பயிற்சி முகாமில் பங்கேற்று பயிற்சி பெற்று வருகின்றனர்.

பயிற்சியாளர் அருணா, மாணவியருக்கு வாலிபால் பயிற்சி அளித்து வருகிறார். தினமும் காலை 6:30 முதல் 9:00 மணி வரையிலும்; மாலை 4:00 முதல் 6:30 மணி வரையிலும் பயிற்சி நடைபெறுகிறது. இது தவிர, தடகளம், பூப்பந்து, கால்பந்து, கபடி, கோகோ ஆகியவற்றிற்கான பயிற்சி முகாமும் நடைபெறுகிறது. இதிலும், மாணவர்கள் பங்கேற்று பயிற்சி பெற்று வருகின்றனர்.

பயிற்சி முகாம் ஒருங்கிணைப்பாளரும், கல்லுாரியின் உடற்கல்வி இயக்குனருமான அசோக்குமார் கூறுகையில், "'என்.ஜி.எம்., ஸ்போர்ட்ஸ் அகாடமி' சார்பில், வாலிபால் பயிற்சி முகாம் நடைபெறுகிறது. பிரான்சில் நடைபெறும் சர்வ தேச பள்ளிகளுக்கான பீச்வாலிபால் போட்டியில் பங்கேற்க தேர்வு செய்யப்பட்ட இரண்டு மாணவியரும் இந்த முகாமில் பங்கேற்றுள்ளனர். மாணவியர் கல்லுாரியிலேயே தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். நன்றாக தேர்ச்சி பெறும் மாணவியர் கல்லுாரியில் சேர்க்கை மற்றும் கட்டண சலுகை வழங்கப்படும்,'' என்றார்.




பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லுாரியில், வாலிபால் பயிற்சி முகாம் நேற்று நடந்தது.

# மாநில அளவில் வாலிபால் போட்டி பாரதியார் மெட்ரிக் அணி முதலிடம்




பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லுாரியில், மாநில அளவில் பள்ளி மாணவிகளுக்கான வாலிபால் போட்டியில், வெற்றி பெற்ற ஆத்துார் பாரதியார் அணிக்கு கோப்பை வழங்கப்பட்டது.

**பொள்ளாச்சி, நவ. 7–**

பொள்ளாச்சியில், மாநில அளவில் பள்ளி மாணவியருக்கு இடையே நடந்த, வாலிபால் போட்டியில், ஆத்துார் பாரதியார் மெட்ரிக் அணி முதலிடம் பிடித்தது.

பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லுாரியில், மாநில அளவில் பள்ளி மாணவியருக்கு இடையே வாலிபால் போட்டி நடந்தது. ஆறு அணிகள் பங்கேற்றன லீக் சுற்று அடிப்படையில் போட்டிகள் நடந்தது.

இறுதி போட்டியில், முதலிடத்தை ஆத்துார் பாரதியார் மெட்ரிக் பள்ளி அணியும்; இரண்டாமிடத்தை சேலம் எஸ்.டி.,மேரிஸ் பள்ளி அணியும் பிடித்தன. சென்னை ஜேப்பியார் பள்ளி அணி மூன்றாம் இடத்தையும், சென்னை எஸ்.டி., ஜோசப் அணி நான்காமிடத்தையும் வென்றது.

தொடர்ந்து, வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசளிப்பு விழா நடந்தது. கல்லுாரி தலைவர் கிருஷ்ணராஜ் வாணவராயர் தலைமை வகித்தார். கல்லுாரி முதல்வர் பழனிசாமி முன்னிலை வகித்தார். டி.எஸ்.பி., கிருஷ்ணமூர்த்தி வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

முதலிடம் பிடித்த பாரதியார் மெட்ரிக் பள்ளி அணிக்கு ரொக்கப்பரிசாக, 8,000 ரூபாய் மற்றும் கோப்பை வழங்கப்பட்டது. இரண்டாமிடம் பெற்ற சேலம் எஸ்.டி.,மேரிஸ் அணிக்கு, 6,000 ரூபாய் ரொக்கப் பரிசு, கோப்பை வழங்கப்பட்டது.

மூன்றாமிடம் பெற்ற சென்னை ஜேப்பியார் பள்ளி அணி, 4,000 ரூபாய் பரிசு, சான்றிதழ் வழங்கப்பட்டது. நான்காமிடம் பெற்ற சென்னை எஸ்.டி., ஜோசப் பள்ளி அணிக்கு, ரொக்கப்பரிசாக, 2,000 ரூபாய் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

# பொள்ளாச்சியில் மண்டல விளையாட்டு போட்டிகள்

**பொள்ளாச்சி** ● பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரியில், பள்ளிகளுக்கிடையே மண்டல அளவிலான போட்டிகள் நேற்று முன்தினம் துவங்கியது.

போட்டிகளை, தமிழ்நாடு பிரிமியர் லீக்கில் விளையாடிய கிரிக்கெட் வீரர் கணேசமூர்த்தி துவக்கி வைத்தார்.

**முதல் நாள் போட்டிகள்**

கோ—கோ, கபடி, பூப்பந்து, இறகுபந்து ஆகிய போட்டிகள் ஆண்கள், பெண்கள் பிரிவில் நடந்தது. திவான்சாபுதூர் அரசு மேல்நிலைப்பள்ளி, ருக்மணியம்மாள் மேல்நிலைப்பள்ளி உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட பள்ளிகள் பங்கேற்றன.

பூப்பந்து போட்டியில், ஜி.கே.என்., பள்ளியும், சமத்துார் அரசு மேல்நிலைப்பள்ளியில் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றன.

பெண்கள் பிரிவில், ரெட்டியாரூர் என்.ஜி.என்.ஜி., மற்றும் மாரியம்மாள் பள்ளியும் தகுதி பெற்றன. கபடி போட்டியில், ஆண்கள் பிரிவில் வேட்டைக்காரன்புதுார் அரசு மேல்நிலைப்பள்ளியும், ஆனைமலை அரசு மேல்நிலைப்பள்ளியும் இறுதி போட்டிக்கு தகுதி பெற்றன.

**இறகுபந்து முடிவுகள்**

ஆண்கள் பிரிவு: சாந்திநிகேதன் முதலிடமும், நாச்சியார் வித்யாலயம் இரண்டாவது இடமும்,

பெண்கள் பிரிவு : சாந்திநிகேதன் முதலிடமும், பி.கே.டி., பள்ளி இரண்டாவது இடமும் பெற்றது.

போட்டிகளுக்கான ஏற்பாடுகளை என்.ஜி.எம்., கல்லூரியின் உடற்கல்வித்துறை இயக்குனர் அசோக்குமார் செய்திருந்தார்.

# மாநில 20- 20 கிரிக்கெட்: பொள்ளாச்சி அணி வெற்றி

**பொள்ளாச்சி ● டிச. 11-**
மாநில அளவிலான, 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில், திண்டுக்கல் அணியை, பொள்ளாச்சி அணி வீழ்த்தியது.

பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லுாரியின் விளையாட்டு துறையின் சார்பில், மாநில அளவிலான, 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகள் வரும் 16ம் தேதி வரை நடக்கிறது.

முதல் நாளான நேற்று, போட்டியை கல்லுாரி முதல்வர் பழனிச்சாமி மற்றும் கல்லுாரி மேலாளர் ரகுநாதன் துவக்கி வைத்தனர்.

என்.ஜி.எம்., கோப்பைக்கான போட்டியில் தமிழக அளவிலுள்ள நிகர் நிலை பல்கலைக்கழகங்கள், தொழில் நுட்ப கல்லுாரிகள் மற்றும் கலை அறிவியல் கல்லுாரிகளிலிருந்து 14 அணிகள் பங்கேற்கின்றன.

கோவை சி.எம்.எஸ்., கல்லுாரி அணி, கோவை காருண்யா யூனிவர்சிட்டி அணியும் நேற்று மோதின.

காருண்யா அணி, 20 ஓவர்களில், 4 விக்கெட் இழப்பிற்கு, 114 ரன்கள் எடுத்தது. சி.எம்.எஸ்., கல்லுாரி அணி, 20 ஓவர்களில், 6 விக்கெட் இழப்பிற்கு, 111 ரன்கள் எடுத்து



இந்த விளையாட்டுக்கான வீடியோவை, தினமலர் 'மொபைல் ஆப்ஸ்' இலவசமாக பதிவிறக்கம் செய்து அல்லது www.dinamalar.com தளத்தில் பார்க்கலாம்.

**பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரியின் விளையாட்டு துறையின் சார்பில், மாநில அளவிலான 20 ஓவர் கிரிக்கெட் போட்டி நடந்தது. அதில், கோவை சி.எம்.எஸ்., கல்லூரி அணியும், கோவை காருண்யா யூனிவர்சிட்டி அணியும் மோதின.**

தோல்வியை தழுவியது.

இரண்டாவது போட்டியில், திண்டுக்கல் காந்திபுரம் ரூரல் இன்ஸ்டிடியூட் யூனிவர்சிட்டி அணி, பொள்ளாச்சி என்.ஐ.ஏ., கல்வி நிறுவனங்கள் அணி மோதின. இதில், திண்டுக்கல் அணி, 20 ஓவருக்கு ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 48 ரன்கள் எடுத்தன. பொள்ளாச்சி என்.ஐ.ஏ., கல்வி நிறுவனங்கள் அணி 5.4 ஓவர்களில், விக்கெட் இழப்பின்றி 49 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இன்று காலை 8:30 மணிக்கு நடக்கும் முதல் போட்டியில் பொள்ளாச்சி என்ஜிஎம் சிஏஎஸ் அணியும், கோவை இந்துஸ்தான் இன்ஜினியரிங் கல்லுாரி அணியும் மோதுகின்றன. மதியம் 12:30 மணிக்கு திண்டுக்கல் ஜிடிஎன்சிஏஎஸ் அணியும், திண்டுக்கல் ஸ்ரீ கிருஷ்ணா சிஏஎஸ் அணியும் மோதுகின்றன. இதற்கான, ஏற்பாடுகளை கல்லுாரி உடற்கல்வி இயக்குனர் அசோக்குமார் செய்து வருகிறார்.

# வீராங்கனைகள் தேர்வு

**பொள்ளாச்சி** • பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரியில், 'என்.ஜி.எம்., ஸ்போர்ட்ஸ் அகாடமி' சார்பில், வாலிபால் வீராங்கனைகள் தேர்வு இன்று நடக்கிறது. இத்தேர்வில் தேர்ச்சி அடையும் மாணவர்களுக்கு இன்று முதல் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு, அம்மாணவியருக்கு விருப்பமுள்ள பாடப்பிரிவினை படிப்பதற்கும் கல்லூரியில் சேர்க்கையும் அளிக்கப்படும்.

வாலிபால் தேர்வுக்கு வரும் வீராங்கனைகள், பிளஸ் 2 தேர்ச்சி அடைந்த மாணவியராக இருத்தல் வேண்டும். 'என்.ஜி.எம்., ஸ்போர்ட்ஸ் அகாடமி'க்கு தேர்வு பெறும் வீராங்கனைகளுக்கு கல்லூரியில் படிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படும்.

சீருடை, உணவு, இருப்பிடம் இலவசமாக வழங்கப்படும். பெண் பயிற்சியாளர் வாலிபால் பயிற்சியளிக்கப்படும். மேலும், மற்ற விளையாட்டுக்களுக்கான தடகளம், பூப்பந்து, கால்பந்து, கபடி, கோகோ ஆகியவற்றில் ஆர்வமுள்ளவர்கள் கல்லூரியில், வரும் 8,9 தேதிகளில் நடக்கவுள்ள தகுதித்தேர்வில் பங்கேற்கலாம் என கல்லூரி முதல்வர் தெரிவித்தார்.

# காட்டுமாடு தாக்கி பெண் காயம்

**வால்பாறை** • சின்கோனா[டேன்டீ] பத்தாம்பாத்தி எஸ்டேட் பகுதியை சேர்ந்தவர் சாராபீபி,40. இவர் நேற்று காலை, 7:00 மணிக்கு வீட்டின் முன் நின்ற போது, வனப்பகுதியிலிருந்து தொழிலாளர் குடியிருப்பு பகுதிக்குள் புகுந்த காட்டுமாடு அவரை தாக்கியது. பின் அருகில் நின்றிருந்த ரெஜினாமெரி என்பவரையும் விரட்டியது. இதில் அவர் உயிர்தப்பினார். காட்டுமாடு தாக்கி படுகாயமடைந்த சாராபீபி வால்பாறை அரசு மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.




பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரியில், வாலிபால் பயிற்சி முகாம் நேற்று நடந்தது.

# என்ஜிஎம் கல்லூரியில் மாரத்தான் போட்டி




மாரத்தான் போட்டியைத் தொடக்கிவைக்கிறார்
கல்லூரி முதல்வர் பழனிசாமி.

**பொள்ளாச்சி, ஆக. 12:** பொள்ளாச்சி என்ஜிஎம் கல்லூரியில் சுதந்திர தினவிழாவை முன்னிட்டு மினி மாரத்தான் போட்டி நடைபெற்றது.

இதில், 120 ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், 2,500 மாணவர்கள்பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் பழனிசாமி, மேலாளர் ரகுநாதன் ஆகியோர் போட்டியைத் தொடக்கிவைத்தனர்.

இதில், 3,5,12 கி.மீ. தூர அளவிலான போட்டிகள் நடைபெற்றன. முதல் 6 இடங்களைப் பிடித்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. போட்டிக்கான ஏற்பாடுகளை கல்லூரி உடற்கல்வி இயக்குநர் அசோக்குமார் செய்திருந்தார்.

THE HINDU

## Marathon for farmers

A 'Marathon for Farmers' has been organised at Pollachi on Monday (Oct. 2) by NGM College for four different categories. The event will be held for school boys (5 km), school girls (3 km), men (8 km) and women (5 km). A release from the college said the initiative aimed at bridging the gap between the knowledge available in water management efficiently and the actual applications being following in the country.

The aim is to re-establish the prosperity of the country side, its soil and those who serve it.

The programme, jointly conducted by the department of agiculture education and the physical education. The run will start at 7 a.m. and end at the NGM campus.

Oct' 2, 2017

# ‘விவசாயம் காப்போம்’ மராத்தான் ஓட்டம்!




பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரி சார்பில், 'விவசாயம் காப்போம்' என்ற தலைப்பில் மராத்தான் போட்டி நடந்தது. இதில், மாணவ, மாணவியர் ஆர்வமாக பங்கேற்றனர்.

**பொள்ளாச்சி, அக். 3–**

பொள்ளாச்சியில், 'விவசாயம் காப்போம்' என்ற தலைப்பில் நடந்த மராத்தான் போட்டியில், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என, ஆறாயிரம் பேர் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரியின் வைர விழா, தொழிலதிபர் மகாலிங்கம் நினைவு நாள், காந்தி ஜெயந்தியை முன்னிட்டு 'விவசாயம் காப்போம்' என்ற தலைப்பில் மராத்தான் போட்டி நடந்தது.

கல்லூரி முதல்வர் பழனிசாமி தலைமை வகித்தார். தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி முத்துக்குமரன் வரவேற்றார். நிர்வாக மேலாளர் ரகுநாதன், சிம்ஸ் இயக்குனர் சுப்ரமணியம், இன்ஸ்பெக்டர் சுப்பிரமணியம், டாக்டர் ராமகிருஷ்ணன், ரோட்டரி கிளப் நிர்வாகி நித்தியானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆண்கள் பிரிவு, 8 கி.மீ., பெண்கள் மற்றும் பள்ளி மாணவர் பிரிவு, 5 கி.மீ., பள்ளி மாணவியர் பிரிவு, 3 கி.மீ., என நான்கு பிரிவுகளில், மராத்தான் போட்டி நடந்தது. இதில், பொள்ளாச்சி மற்றும் பல்வேறு பகுதியை சேர்ந்த, ஆறு ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர், பொதுமக்கள் ஆர்வமாக பங்கேற்றனர்.

என்.ஜி.எம்., கல்லூரி வளாகத்தில் துவங்கிய மராத்தான் போட்டி, பாலக்காடு ரோடு, ஐயப்பன் கோவில் ரோடு, கோவை ரோடு என முக்கிய சாலைகள் வழியாக சென்று, கல்லூரி வளாகத்தில் நிறைவு பெற்றது.

ஆண்கள் பிரிவில், ஜென்னி ஸ்போர்ட்ஸ் பவுண்டேஷன் அபிலாஸ், பொள்ளாச்சி எஸ்.டி.சி., கல்லூரி அருண் பிரபு, ஜெ.எஸ்.எப்., ஸ்போர்ட்ஸ் கிளப் சசிக்குமார் ஆகியோர் முதல் மூன்று இடங்களை பிடித்தனர்.

பெண்கள் பிரிவில், கோவை பிட் வெலா சிட்டி வெற்றிவேல் விக்னேஸ்வரி, பொள்ளாச்சி எஸ்.டி.சி., கல்லூரி மகாலட்சுமி, அந்தியூர் கமலம் கலை அறிவியல் கல்லூரி மாணவி கலைமணி ஆகியோர் முதல் மூன்று இடங்களை பிடித்தனர்.

பள்ளி மாணவர் பிரிவில், கோவை பிட்வெலா சிட்டி அருண், ஜென்னி ஸ்போர்ட்ஸ் பவுண்டேசன் அபிலாஸ், ஜென்னி ஸ்போர்ட்ஸ் பவுண்டேஷன் கோகுல் ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களை பிடித்தனர்.

பள்ளி மாணவியர் பிரிவில், ருக்மணியம்மாள் மேல்நிலைப் பள்ளி மாணவி திவ்யா, ஹோபாஸ்ட் எச்.எஸ்.ஏ.சி., யசோதா, தூத்துக்குடி கோபிகா ஆகியோர் முதல் மூன்று இடங்களை பிடித்தனர்.

ஒவ்வொரு பிரிவுக்கு தலா பத்து பரிசுகளாக மொத்தம், 40 பரிசுகள் வழங்கப்பட்டன. மொத்த பரிசு தொகை, 70,000 ரூபாய். முதல் பரிசு, 7,500 ரூபாய்; இரண்டாம் பரிசு, 5,000 ரூபாய்; மூன்றாம் பரிசு, 2,500 ரூபாயும் வழங்கப்பட்டது.

வெற்றி பெற்றவர்களுக்கு கல்லூரி முதல்வர் பரிசுத்தொகை, சான்றிதழ்களை வழங்கினார். கல்லூரி விளையாட்டுத் துறை தலைவர் அசோக்குமார், விளையாட்டுத்துறை பயிற்றுனர்கள் ரவிகாந்த், திருநாவுக்கரசு, அத்லெட்டிக் கிளப், கோவை அத்லெட்டிக் கிளப் உறுப்பினர்களும், மராத்தான் போட்டிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.




'பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரியில் விவசாயிகளை காப்போம் என்ற முழக்கத்தோடு மராத்தான் போட்டியில் பங்கேற்ற சிறுவர்கள். படம் : ரா.ராகவேந்திரன்.




'பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரியில் விவசாயிகளை காப்போம் என்ற முழக்கத்தோடு மராத்தான் போட்டியில் பங்கேற்ற சிறுமிகள். படம் : ரா.ராகவேந்திரன்.

கருத்துக்கள்

பதிவு செய்ய

# கிரிக்கெட்: வி.எல்.பி., - என்.ஜி.எம்., மோதல்

**பொள்ளாச்சி, செப். 8–**

பாரதியார் பல்கலை கல்லுாரிகளுக்கான, 'சி' மண்டல கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில், வி.எல்.பி., கல்லுாரி அணியும், என்.ஜி.எம்., கல்லுாரி அணியும் மோதுகின்றன.

கோவை மாவட்டம், பொள்ளாச்சி பூசாரிப்பட்டியிலுள்ள 'பொள்ளாச்சி கலை, அறிவியல் கல்லுாரி'யில், பாரதியார் பல்கலை, 'சி' மண்டல அளவிலான கிரிக்கெட் போட்டி நடக்கிறது. அரையிறுதி முதல் போட்டியில், கோவை ஸ்ரீ கிருஷ்ணா கல்லுாரி, வி.எல்.பி., கல்லுாரி அணிகள் மோதின.

முதலில், பேட்டிங் செய்த வி.எல்.பி., அணி, 25 ஓவரில், 7 விக்கெட் இழப்புக்கு, 146 ரன்கள் எடுத்தது. அடுத்து விளையாடிய கிருஷ்ணா அணி, 25 ஓவரில், 7 விக்கெட் இழப்புக்கு, 129 ரன்கள் எடுத்து, 17 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. வி.எல்.பி., அணி இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது.




■ பொள்ளாச்சியில் நடந்த கிரிக்கெட் போட்டியில், பொள்ளாச்சி கலை அறிவியல் கல்லுாரி, என்.ஜி.எம்., கல்லுாரி அணிகள் மோதின.

மற்றொரு அரையிறுதி போட்டியில், பொள்ளாச்சி கலை அறிவியல் கல்லுாரி, என்.ஜி.எம்., கல்லுாரி அணிகள் மோதின. என்.ஜி.எம்., அணி, 24.4 ஓவரில், 10 விக்கெட் இழப்பிற்கு, 133 ரன்கள் எடுத்தது. அடுத்து விளையாடிய பொள்ளாச்சி கலை அறிவியல் கல்லுாரி அணி, 25 ஓவரில், 9 விக்கெட் இழப்பிற்கு, 60 ரன்கள் எடுத்து தோல்வியடைந்தது. என்.ஜி.எம்., கல்லுாரி அணி வெற்றி பெற்றது.

இறுதி போட்டியில், கோவை வி.எல்.பி., கல்லுாரி, பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லுாரி அணிகள் மோதுகின்றன. மூன்றாவது இடத்துக்கான போட்டியில், பொள்ளாச்சி கலை அறிவியல் கல்லுாரி, கோவை கிருஷ்ணா கல்லுாரி அணிகள் மோதுகின்றன.

# தாலுகா அளவிலான பூப்பந்தாட்டப்போட்டி

## என்.ஜி.எம்., பி கிளப் அணி வெற்றி




பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரியில், தாலுகா அளவிலான பூப்பந்தாட்ட போட்டி நேற்று நடந்தது.

**பொள்ளாச்சி** ● மே 15–

பொள்ளாச்சியில் நடந்த தாலுகா அளவிலான பூப்பந்தாட்ட போட்டியில், என்.ஜி.எம்., பி கிளப் அணி வெற்றி பெற்றது.

பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரி பூப்பந்தாட்ட கழகம் சார்பில், தாலுகா அளவிலான பூப்பந்தாட்ட போட்டி நேற்று கல்லூரி மைதானத்தில் நடந்தது. கல்லூரியின் முதல்வர் பழனிச்சாமி போட்டியை துவக்கி வைத்தார். இதில், உடுமலை, பொள்ளாச்சி, கிணத்துக்கடவு தாலுகாக்களை சேர்ந்த 11 அணிகள் பங்கேற்றன. நாக் அவுட் மற்றும் லீக் முறையில் போட்டிகள் நடத்தப்பட்டன.

உடுமலை யுஆர்சி அணியும், என்.ஜி.எம்., ஏ அணியும் மோதின. அதில், உடுமலை யுஆர்சி அணி, 35– 29 என்ற புள்ளிகள் பெற்று வெற்றி பெற்றது. அக்‌ஷயா அணியும், இவிஏ அணியும் மோதின. அதில், இவிஏ அணி, 22–35 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது.

பொள்ளாச்சி ஏ அணியும்– என்.ஜி.என்.ஜி., அணியும் மோதின. அதில், பொள்ளாச்சி ஏ அணி, 35–23 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது. மற்றொரு ஆட்டத்தில் என்.ஜி.எம்., பி அணியும், உடுமலை யுஆர்சி அணியும் மோதின. அதில், என்.ஜி.எம்., பி அணி, 35–18 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது.

பொள்ளாச்சி ஏ அணியும், இவிஏ அணியும் மோதிய போட்டியில், இவிஏ அணி, 26–35 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து, நடந்த லீக் போட்டியில், பொள்ளாச்சி என்.ஜி.எம்., அணியும், பொள்ளாச்சி ஏ அணியும் மோதின. அதில், என்.ஜி.,எம்., பி அணி, 35–24 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது. இவிஏ அணியும், யுஆர்சி அணியும் ஆடின. அதில், இவிஏ அணி, 35–27 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது.

இறுதி போட்டியில், என்.ஜி.எம்., பி கிளப் அணியும், இவிஏ கிளப் அணியும் மோதின. என்.ஜி.எம்., பி கிளப் அணி, 37–35 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது. முதலிடம் பிடித்த என்.ஜி.எம்.,பி கிளப் அணிக்கு என்ஜிஎன்ஜி உடற்கல்வி ஆசிரியர் சரவணன் 4,000 ரூபாய் பரிசுத்தொகையும், பதக்கமும் வழங்கினார். இரண்டாமிடத்தை பிடித்த இவிஏ கிளப் அணிக்கு என்.ஜி.எம்., கல்லூரியின் பூப்பந்தாட்ட கழகத்தின் சார்பில் 3,000 ரூபாய் பரிசுத்தொகையும், பதக்கமும் வழங்கினார்.

மூன்றாமிடத்தை பிடித்த யுஆர்சி உடுமலை அணிக்கு, 2,000 ரூபாயை என்.ஜி.எம்., கல்லூரியின் வணிகவியல் துறை துணை தலைவர் சித்திரை செல்வன் வழங்கினார். நான்காமிடம் பெற்ற பொள்ளாச்சி ஏ அணிக்கு என்.ஜி.எம்., பூப்பந்தாட்ட கழகத்தின் சார்பில், 1000 ரூபாய் பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

இப்போட்டிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் அசோக்குமார், என்.ஜி.எம்., கல்லூரியின் பூப்பந்தாட்ட கழகத்தின் செயலாளர் முத்துவேல் செய்தனர்.

# வாலிபால் பயிற்சி முகாம் 40 மாணவியர் பங்கேற்பு

**பொள்ளாச்சி ● ஏப். 29–**
பொள்ளாச்சி 'என்.ஜி.எம்., ஸ்போர்ட்ஸ் அகாடமி' சார்பில், வாலிபால் பயிற்சி முகாம் என்.ஜி.எம்., கல்லூரியில் நடைபெற்று வருகிறது. இதில், மாணவியர் ஆர்வமுடன் பயிற்சி பெற்று வருகின்றனர்.

பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரியில், 'என்.ஜி.எம்., ஸ்போர்ட்ஸ் அகாடமி' சார்பில், மாணவியருக்கான வாலிபால் பயிற்சி முகாம் நடைபெற்று வருகிறது. பொள்ளாச்சி மற்றும் சுற்றுப் பகுதிகள், கேரளா உள்ளிட்ட பகுதிகளிலிருந்தும் 40 மாணவியர் இந்த பயிற்சி முகாமில் பங்கேற்று பயிற்சி பெற்று வருகின்றனர்.

பயிற்சியாளர் அருணா, மாணவியருக்கு வாலிபால் பயிற்சி அளித்து வருகிறார். தினமும் காலை 6:30 முதல் 9:00 மணி வரையிலும்; மாலை 4:00 முதல் 6:30 மணி வரையிலும் பயிற்சி நடைபெறுகிறது. இது தவிர, தடகளம், பூப்பந்து, கால்பந்து, கபடி, கோகோ ஆகியவற்றிற்கான பயிற்சி முகாமும் நடைபெறுகிறது. இதிலும், மாணவர்கள் பங்கேற்று பயிற்சி பெற்று வருகின்றனர்.

பயிற்சி முகாம் ஒருங்கிணைப்பாளரும், கல்லூரியின் உடற்கல்வி இயக்குனருமான அசோக்குமார் கூறுகையில், "'என்.ஜி.எம்., ஸ்போர்ட்ஸ் அகாடமி' சார்பில், வாலிபால் பயிற்சி முகாம் நடைபெறுகிறது. பிரான்சில் நடைபெறும் சர்வதேச பள்ளிகளுக்கான பீச்வாலிபால் போட்டியில் பங்கேற்க தேர்வு செய்யப்பட்ட இரண்டு மாணவியரும் இந்த முகாமில் பங்கேற்றுள்ளனர். மாணவியர் கல்லூரியிலேயே தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். நன்றாக தேர்ச்சி பெறும் மாணவியர் கல்லூரியில் சேர்க்கை மற்றும் கட்டண சலுகை வழங்கப்படும்,'' என்றார்.

# மாநில அளவிலான கிரிக்கெட் பொள்ளாச்சி அபார வெற்றி

**பொள்ளாச்சி ● டிச. 12–**
பொள்ளாச்சியில் நடைபெறும் மாநில அளவிலான, 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில், என்.ஜி.எம்., கல்லூரி அணி வெற்றி பெற்றது.

பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரி விளையாட்டு துறை சார்பில், மாநில அளவிலான, 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகள், வரும் 16ம் தேதி வரை நடக்கின்றன. தமிழக அளவிலுள்ள நிகர்நிலை பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளிலிருந்து, 14 அணிகள் பங்கேற்றுள்ளன.

நேற்று நடந்த போட்டியில், பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரி அணியும், கோவை இந்துஸ்தான் அணியும் மோதின. முதலில் பேட்டிங் செய்த என்.ஜி.எம்., அணி, 20 ஓவர்களின் முடிவில், 5 விக்கெட் இழப்புக்கு, 159 ரன்கள் எடுத்தது. அதிகப்பட்சமாக மகேந்திர மணி, 42 பந்துகளுக்கு, 55 ரன்களை எடுத்தார்.

இரண்டாவது பேட்டிங் செய்த கோவை இந்துஸ்தான் கல்லூரி அணி, 19 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து, 96 ரன்கள் எடுத்து தோல்வியை தழுவியது.

வெற்றி பெற்ற என்.ஜி.எம்., கல்லூரி அணி அடுத்த சுற்றுப்போட்டிக்கு தகுதி பெற்றது. இதற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் அசோக்குமார் செய்து வருகிறார்.